பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08 01 2025 **WEDNESDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1 ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான மசோதாக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் விரிவான ஆலோசனை நடத்தப்படும் என்று அதற்கான நாடளுமன்ற கூட்டுக்குழு தெரிவித்துள்ளது.

2. நடப்பு நிதியாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் 76 சதவீதம் செலவிடப்பட்டுள்ளதாக ரயில்வே கூறியுள்ளது.

3 தமிழகத்தில் **HMPV** வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மாநில அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

4. சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று பிஜேபி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

5. தோஹா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மானவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான மசோதாக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் விரிவான ஆலோசனை நடத்தப்படும் என்று அதற்கான நாடளுமன்ற கூட்டுக்குழு தெரிவித்துள்ளது. இன்று புதுதில்லியில் நடைபெற்ற அக்குழுவின் முதலாவது கூட்டத்தில், இந்த மசோதாக்கள் குறித்து சட்டத்துறை அதிகாரிகள் விரிவாக எடுத்துரைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய குழுவின் தலைவரும், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு சௌத்ரி, சட்ட நிபுணர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் இதுகுறித்து ஆலோசிக்கப்படும் என்றார்.

<<<<<>>>>>>

ரயில்வேத்துறை நடப்பு நிதியாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் 76 சதவீதம் அளவிற்கு செலவிட்டுள்ளது.

ரயில்பாதையை மின்மயமாக்குதல், அகல ரயில்பாதை, இரட்டை ரயில்பாதை, போக்குவரத்து சிக்னல்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

136 வந்தேபாரத் ரயில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரயில்வேயை நவீனமயமாக்குவதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் **HMPV** வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மாநில அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

கர்நாடக எல்லைப்பகுதிகளில் உள்ள சோதனைச்சாவடியில் காய்ச்சல் தடுப்பு முகாம் அமைக்கப்பட்டு, பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

பிஜேபி-யின் மையக்குழு கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

பிஜேபி-யின் பொதுச்செயலாளர் திரு தருண் சுக் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன், மாநில தலைவர் திரு அண்ணாமலை, மேலிடப்பார்வையாளர் திரு சுதாகர் ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி தமிழிசை சௌந்தரராஜன், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக பிஜேபி உட்பட போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் கைது செய்யப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வழக்கில், கைது செய்யப்பட்டுள்ள நபர் திமுக ஆதரவாளர் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக இவ்வழக்கினை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் பெண்கள் முதலமைச்சர் மீது நம்பிக்கையை இழந்து வருவதாகவும் திருமதி தமிழிசை சௌந்தராஜன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் காவல்துறையினர் பாரபட்சமாக செயல்படுவதாக பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் போராட்டம் நடத்துவதற்காக முன்கூட்டியே அனுமதி கோரியும், அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், திமுக அறிவிப்பு வெளியிட்ட 24 மணிநேரத்திற்குள் போராட்டம் நடத்தியதாகவும், அந்த போராட்டத்தை தடுத்து நிறுத்த காவல்துறையினர் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் திமுக அரசும், காவல்துறையும் செயல்படும் விதத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

இடதுசாரி கட்சிகள் குறித்து திமுக துணை பொதுச்செயலாளர் திரு ஆ ராசா பொறுப்பற்ற வகையில் கருத்து தெரிவித்துள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு முத்தரசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இடதுசாரிகள் சுயநலவாதிகளாக மாறிவிட்ட காரணத்தினால் கொள்கை தோற்றுப்போய்விட்டதாக திரு ராசா தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற பேச்சுகள் பொறுப்பற்ற செயலாகும் என்றும் திரு முத்தரசன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெறவுள்ள மகா கும்பமேளாவிற்கான ஆகாஷ்வாணியின் சிறப்பு பாடலை தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

கும்பமேளா வரும் 13-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 26-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

<<<<<>>>>>

ஐ ஐ டி சென்னை சாரங் கலாச்சார விழா நாளை தொடங்கி, 13-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதாக அதன் இயக்குனர் திரு காமகோடி தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி பருத்திப்பட்டில் உள்ள சூழலியல் பூங்காவில் முழுநேர கிளை நூலகத்திற்கான கட்டிடத்தை மாநில அமைச்சர் திரு நாசர் இன்று திறந்துவைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியபட்டி ஊராட்சியில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி பூங்கொடி இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

விருதுநகர் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஜெயசீலன் இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தோஹாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மானவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 11-5, 11-7, 11-5 என்ற செட் கணக்கில், கத்தாரின் **Rawad Alnaser – Ahmed Korani** இணையை வென்றது.

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மாளவிகா பன்சோட் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 21-16 என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Goh Jin Wei** –ஐ வென்றார்.

<<<<<>>>>>>

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் பும்ரா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

பேட்டிங் பிரிவில் ரிஷப்பந்த் 9-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆல்ரவுண்டர் பிரிவில் ஜடேஜாவும் முதலிடத்தில் நீடிக்கிறார்.

<<<<<END>>>>>